60 வயது என்று ஓய்வு பெறும் வயதை உயர்த்தினல் தகுதி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை இல்லாமல் போய்விடும். ஆகையால் அவ்வாறு செய்வதாக உத்தேசமில்லை.

திரு. எம். வி. கரிவேங்கடம் : தனியார்துறைப் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்கள் 58 வயதிற்கு மேல் பணிபுரிய வேண்டுமானுல் அரசாங்க அனுமதியைப் பெறவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். அரசாங்கப் பள்ளியில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கும் அந்தமாதிரி அனுமதி வழங்கப்படுவது உண்டா? எந்தச் சந்தர்ப்பத்தில் அவ்வாறு வழங்கப்படுகிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : குறிப்பிட்ட கேஸ்களில் தகுந்த காரணம் இருந்தால் அரசாங்கம் கவனிக்கும். சாதாரணமாக அம்மாதிரிச் செய்வதில்லை.

புலவர் கா. கோவிந்தன் : உத்தியோகம் கொடுக்கிற நேரத்தில் ஹரிஜனங்களுக்கு வயதுக் கட்டுப்பாட்டில் கூடக் கொடுக்கிருர்கள். அதேபோன்று ஓய்வு பெருகின்ற நேரத்தில் ஹரிஜனங்களைப் பொருத்தவரை 2, 3 ஆண்டுகளுக்குக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்களும் ஆசிரியர் பணிக்குத் தகுதி பெற்றுக் கொண்டு வருகிருர்கள். ஆகவே, ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு வேலை இல்லாமல் போகும் என்ற காரணத்தால் ஹரிஜனங்களாக இருந்தாலும் வயதை அதிகப்படுத்த உத்தேசமில்லை.

திரு. சா. ராமசாமி : 58 வயதுக்கு மேல் ஒருவரை நியமிக்கும் போது உடல் நலத்திற்கேற்றவாறு மருத்துவச் சான்றுகள் பெற்று நியமிக்கலாம். அதேபோன்று 58 வயதுக்குள் ஓய்வு பெற விரும்புகிறவர்களுக்கும் தனிச் சலுகை அளிக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : 55 வயதுக்குள் ஓய்வு பெறுகிறவர்களுக்கு எவ்வாறு விதிகள் இருக்கின்றனவோ அதே விதிகள் 58 வயதுக்குட்பட்டவர்களுக்கும் பொருந்தும்.

*254 கேள்வி.—திரு. சா. ராமசாமி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆதாரப் பள்ளிகளில் ஆசிரியர்களை நியமனம் செய்யும்போது ஆதாரப் பயிற்சி பெருத ஆசிரியர்களை நியமனம் செய்யக்கூடாது என்று அரசினரால் அறிவிக்கப்பட்டுள்ளதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes.

*255 கேள்வி.—திரு. சா. ராமசாமி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஹையர் கிரேடு ஆசிரியர்களாக பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுத்து செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக மாற்றும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இல்லை.